**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்போரூர்.**

முன்னிலை: **கா. நிலவரசன்,** B.A.,B.L,

மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர், திருப்போரூர்.

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 29 ஆம் நாள் புதன்கிழமை

**பட்டியல் வழக்கு எண்.477/2025**

**வழக்கின் சுருக்கம்**

(விதி 106 குற்றவியல் நடைமுறை விதிகள் மற்றும் நீதிமுறை படிவம் 61)

| | | |
|---|---|---|
| 1. | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண் | தமிழ்நாடு அரசுக்காக காவல் உதவி ஆய்வாளர், காயார் காவல் நிலையம், குற்ற எண். 98/2023 |
| 2. | எதிரிகளின் பெயர் | 1.மூர்த்தி<br>2.விக்னேஷ்<br>3.பிரவீன்<br>4.பிரேம்குமார்<br>5.முருகேசன்<br>6.ஸ்ரீனிவாசன் |
| 3. | எதிரிகளின் தந்தை / கணவர் பெயர் | 1.முருகேசன்<br>2.ஸ்ரீனிவாசன்<br>3.ஸ்ரீனிவாசன்<br>4.முருகேசன்<br>5.வேலு<br>6.பலராமன் |
| 4. | எதிரிகளின் தொழில் | கூலி |
| 5. | எதிரிகளின் முகவரி | அனைவரும் வசிப்பது மன்னடியம்மன் கோவில் தெரு, வெம்பேடு கிராமம், திருப்போரூர், செங்கல்பட்டு |

| | | |
|---|---|---|
| 6. | எதிரிகளின் வயது | 1. 26/2023<br>2. 25/2023<br>3. 20/2023<br>4. 29/2023<br>5. 55/2023<br>6. 50/2023 |
| 7. | எதிரிகளின் இனம்/சமுதாயம் (காண்க நீதிமுறை படிவம் 61) | – |
| 8. | குற்ற நிகழ்வு நாள் | 02.05.2023 |
| 9. | இறுதி அறிக்கை/தனி நபர் புகார் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நாள் | 18.12.2025 |
| 10. | எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜரான நாள் | 24.02.2026 |
| 11. | எதிரிகள் பிணையில் சென்ற நாள் | 1 மற்றும் 2 – 05.05.2023<br>3 முதல் 5 – 19.05.2023 |
| 12. | வழக்கு அமர்வு நீதிமன்ற விசாரணைக்கு மாற்றப்பட்ட நாள் | எழவில்லை |
| 13. | விசாரணை தொடங்கப்பட்ட நாள் (பிரிவுகள் 207 மற்றும் 238 குவிமுச) | 24.02.2026 |
| 14. | விசாரணை முடிவுற்ற நாள் | 28.04.2026 |
| 15. | தீர்ப்பு/உத்தரவு நாள் | 29.04.2026 |
| 16 | எதிரிகளுக்கு தீர்ப்பு நகல் வழங்கப்பட்ட நாள் | எழவில்லை |
| 17. | காலதாமதத்திற்க்கான காரணம் | எழவில்லை |

இவ்வழக்கு 18.12.2025 அன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு, கடந்த 28.04.2026 அன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது, அரசு

தரப்பில் **கற்றறிந்த குற்ற உதவி வழக்கறிஞர் நிலை– i** அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 6 எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.D.புருஷோத்தமன்** அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதமும், வழக்காவணங்கள் பரிசீலித்து, இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**<u>தீர்ப்புரை</u>**

திருப்போரூர், வெண்பேடு கிராமத்தை சேர்ந்த அ.சா.1 ற்கும் 3 ம் எதிரிக்கும் இடையே வாலிபால் விளையாடும் போது ஏற்பட்ட தகராறை தொடர்ந்து கடந்த 02.05.2023 அன்று இரவு 08.00 மணியளவில் அ.சா.1 தனது வீட்டில் அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகியோருடன் பேசிக்கொண்டிருந்த போது எதிரிகள் அனைவரும் சட்டவிரோதமாக கைகளில் ஆயுதங்களுடன் அங்கு வந்து, அ.சா.1 ஐ தேவிடியா பையா என் தம்பியிடமா தகராறு செய்கிறாய் என சொல்லி அ.சா.1 ஐ தாக்கியதாகவும், அதை தடுக்க வந்த அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகியோரையும் எதிரிகள் தாக்கி கொடுங்காயம் ஏற்படுத்தியதாகவும் மற்றும் கொலை மிரட்டல் விடுத்ததாக எதிரிகளின் மீது காயார் காவல் நிலைய உதவி ஆய்வாளர் பிரிவுகள் 147, 148, 294(b), 326 மற்றும் 506(2) இ.த.ச.–வின் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. இவ்வழக்கின் எதிரிகள் அழைப்பாணையின் பேரில் இந்நீதிமன்றத்தில் ஆஜராகிய பிறகு பிரிவு 230 பா.நா.சு.ச–வின் கீழ் வழக்கின்

ஆவணங்கள் இலவசமாக வழங்கப்பட்டு, எதிரிகள் அதனை மறுத்ததால் வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டத்தில் எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றங்களுக்கு முதல் தோற்ற வழக்கு காணப்பட்டதால், எதிரிகளுக்கு எதிராக பிரிவுகள் 147, 148, 294(b), 326 மற்றும் 506(2) இ.த.ச. உ/இ.149 இ.த.ச வின் கீழ் குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்டு, எதிரிகளுக்கு தமிழில் படித்து காட்டி வினவியபோது எதிரிகள் அதனை மறுத்ததால், அவர்களுக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றசாட்டுக்கள் குறித்து விசாரணை செய்ய அரசு தரப்பிற்கு இந்நீதிமன்றம் உத்தரவிட்டது.

3. அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.4 ஆகிய சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 ஆகிய சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. சான்றுபொரு குறியீடு செய்யவில்லை.

**<u>4. அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம்;</u>**

i. மேற்கண்ட சம்பவத்தை தொடர்ந்து காயமுற்ற அ.சா.1 முதல் அ.சா.3 ஆகியோர் நெல்லிக்குப்பம், சத்யசாய் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்துள்ளனர். அங்கு பணியில் இருந்த மருத்துவர் தியாகராஜன் என்பவர் அவர்களுக்கு சிகிச்சை அளித்துள்ளார். பின்பு சம்பவம் குறித்து மருத்துவமனையில் இருந்து கிடைத்த தகவலின் பேரில் இவ்வழக்கின் புலன்

விசாரணை அதிகாரி காவல் உதவி ஆய்வளர் திரு.ராஜா என்பவர் அ.சா.1 ஐ விசாரித்து, அ.சா.ஆ.1/புகார் வாக்குமூலம் பெற்றுள்ளார்.

ii. பின்பு நிலையம் வந்து, அன்று காலை 06.00 மணியளவில் குற்ற எண்.98/2023, ச/பி.147, 148, 294(பி), 324 மற்றும் 506(2) இ.த.ச–வின் கீழ் அ.சா.ஆ.2/முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். பின்பு அன்று காலை 07.00 மணியளவில் சம்பவ இடமான வெம்பேடு அ.சா.1 ன் வீடு அருகே சென்று சாட்சிகள் குமார் மற்றும் கலைசெல்வன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ 3/பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.4/மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். பின்பு சாட்சிகள் அ.சா.1 முதல் அ.சா.ஆ.3, தேவதாஸ், விசாலாட்சி, பிரித்விராஜ், செங்கேணி ஆகியோரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

iii. இவ்வழக்கின் 1 மற்றும் 2 எதிரிகளை அன்று மதியம் 12.00 மணியளவில் கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். 3 முதல் 6 எதிரிகள் செங்கல்பட்டு மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் முன்பிணை பெற்றதால் கைது செய்யப்படவில்லை. மேலும் காயமுற்ற அ.சா.1 முதல் அ.சா.3 ஆகியோருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் தியாகராஜன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அ.சா.1 முதல் அ.சா.3 ஆகியோருக்கு வழங்கப்பட்ட

அ.சா.ஆ.5 முதல் அ.சா.ஆ.7/கருத்துரையுடன் கூடிய விபத்து பதிவேடு பெற்றுள்ளார்.

iv. பின்பு சாட்சிகளுக்கு ஏற்பட்ட காயமானது கொடுங்காயம் என்று மருத்துவர் அளித்த கருத்துரையின் அடிப்படையில் சட்டப்பரிவு 324 இ.த.ச வை 326 இ.த.ச ஆக ஆ.சா.ஆ.8/சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை மூலம் பிரிவு மாறுதல் செய்து, இவ்வழக்கின் புலன் விசாரணை நிறைவு செய்து எதிரிகளின் மீது பிரிவுகள் 147, 148, 294(பி), 326 மற்றும் 506(2) இ.த.ச கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

5. எதிரிகளுக்கு எதிராக சொல்லப்பட்டுள்ள சாட்சியங்கள் குறித்து பிரிவு 351(1)ஆ பா.நா.சு.ச–வின் கீழ் வினவியபோது எதிரிகள் தங்களுக்கு எதிரான சாட்சியங்களை மறுத்துள்ளனர். மேலும் தங்கள் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் யாரும் இல்லை என்று தெரிவித்தனர்.

6. அரசு தரப்பில் தோன்றிய கற்றறிந்த குற்றவியல் உதவி வழக்கறிஞர் நிலை–I தனது வாதத்தில், எதிரிகளின் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் முன்னிறுத்தப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலமாக

சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும், எனவே எதிரிகளுக்கு அதிகபட்ச தண்டனை வழங்க வேண்டும் என்று வாதிட்டார்.

7. மாறாக எதிரிகள் தரப்பில் தோன்றிய கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், எதிரிகளின் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை உறுதிபடுத்தும் வகையில் அரசு தரப்பில் முன்னிறுத்தப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் அமையவில்லை என்றும், எனவே சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி எதிரிகளை விடுதலை செய்ய வேண்டும் என்று வாதிட்டார்.

8. இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் கவனத்துடன் பரிசீலிக்கப்பட்டது.

**இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டியது யாதெனில், எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதே ஆகும்.**

9. எதிரிகள் கைகளில் ஆயுதங்களுடன் சட்டவிரோதமாக ஒன்று கூடியதாகவும், அ.சா.1 முதல் அ.சா.3 ஆகியோரை பொது இடத்தில் ஆபாசமாக

திட்டியதாகவும், கையாலும், கொம்பாலும் தன்னிச்சையாக தாக்கி கொடுங்காயம் ஏற்படுத்தியதாகவும் மற்றும் கொலை மிரட்டல் விடுத்ததாகவும் குற்றச்சாட்டுகள் வனையப்பட்டுள்ளது. அ.சா.1 கொடுத்துள்ள புகாரில், சம்பவ நாளன்று அ.சா.1 வீட்டில் இருந்த போது எதிரிகள் தடி, கொம்பு, பழுப்பு போன்ற ஆயுதங்களுடன் வந்து, அ.சா.1 ஐ ஆபாசமாக திட்டியதாகவும், ஆயுதங்களால் அ.சா.1 ன் தலையில் தன்னிச்யைாக தாக்கியதாகவும், தடுக்க வந்த அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகியோரையும் தாக்கியதாகவும் மற்றும் கொலை மிரட்டல் விடுத்தாகவும் குறிப்பிட்டுள்ளார்.

10. ஆனால் அ.சா.1 ஐ இந்நீதிமன்றத்தில் விசாரணை செய்த போது, எதிரிகள் தன்னுடைய ஊர்காரர்கள் என்றும், கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பாக 6 ம் எதிரியின் மகன் பிரவீன்குமார் என்பவருடன் வாலிபால் விளையாடும் போது வாய்தகராறு ஏற்பட்டதாகவும், அது குறித்து கேட்ட போது எதிரிகளுடன் வாய்தகராறு ஏற்பட்டதாகவும், அந்த கோபத்தில் புகார் கொடுத்துவிட்டதாகவும், எதிரிகள் தன்னை ஆபாசமாக திட்டவோ, தாக்கவோ கொலை மிரட்டல் விடுக்கவோ இல்லை என்று அரசு தரப்பு வழக்கிற்கு முற்றிலும் முரணாக சாட்சியம் அளித்துள்ளார்.

11. காயமுற்ற அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகியோர் தங்களுடடைய சாட்சியத்தில் அ.சா.1ன் சாட்சியத்தை சார்ந்து, அ.சா.1ற்கும், எதிரிகளும் வாய் தகராறு ஏற்பட்டதாகவும், அந்த கோபத்தில் அ.சா.1 புகார் கொடுத்துவிட்டதாகவும், எதிரிகள் தங்களை ஆபாசமாக திட்டவோ, தாக்கவோ, கொலை மிரட்டல் விடுக்கவோ இல்லை என்று சாட்சியம் அளித்துள்ளனர். எனவே அ.சா.1 முதல் அ.சா.3 ஆகியார் அரசு தரப்பு வழக்கிற்கு முற்றிலும் முரணாக சாட்சியம் அளித்துள்ளதால் அவர்களின் சாட்சியம், எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை உறுதிப்படுத்த போதுமானதாக இல்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

12. எனவே இவ்வழக்கின் பிரதான சாட்சிகளான அ.சா.1 முதல் அ.சா.3 ஆகியோர் அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியம் அளித்து உள்ள நிலையில், இவ்வழக்கின் பிற சாட்சிகள் விசாரணை செய்வதிலிருந்து விலக்கப்பட்டு, புலன் விசாரணை அதிகாரிக்கு பதிலாக அவரது கையெழுத்துக்களை பரிச்சயம் பெற்ற காயாா காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் அ.சா.4 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார்.

13. அ.சா.4 அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளித்திருந்தாலும், அவருடைய சாட்சியம் ஆவணங்கள் அடிப்படையில் மட்டுமே அமைந்துள்ளது. மேலும் அ.சா.4–ன் சாட்சியத்தின் அடிப்படையில் மட்டுமே எதிரிகளின் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பால் உறுதிப்படுத்தப்பட்டதாக தீர்மானிக்க முடியாது. எனவே அ.சா.4 ன் சாட்சியமும் அரசு தரப்பு வழக்கிற்கு பயன்படவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

14. எனவே அரசு தரப்பில் முன்னிறுத்தப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலமாக எதிரிகளின் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளான கைகளில் ஆயுதங்களுடன் சட்டவிரோதமாக ஒன்று கூடியது, அ.சா.1 முதல் அ.சா.3 ஆகியோரை பொது இடத்தில் ஆபாசமாக திட்டியது, கையாலும், கொம்பாலும் தன்னிச்சையாக தாக்கி கொடுங்காயம் ஏற்படுத்தியது மற்றும் கொலை மிரட்டல் விடுத்தது ஆகியவை அரசு தரப்பால் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**இறுதியாக, சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி, எதிரிகள் பிரிவுகள் 147, 148, 294(பி), 326 மற்றும் 506(2) உ/இ.149 இ.த.ச வின் கீழ் குற்றவாளிகள் இல்லை என்று தீர்மானித்து, எதிரிகளை பிரிவு 271(1) பா.நா.சு.ச– வின் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.**

வழக்கு சொத்துக்கள் இல்லை. எதிரிகள் எழுதிக்கொடுத்த பிணை பத்திரம் மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்து செய்யவும் உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்துதட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, இன்று (29.04.2026) இத்திறந்த நீதிமன்றத்தில் இவ்அவையறிய பகரப்படுகிறது.

NILAVARASAN KASI
Digitally signed by NILAVARASAN KASI

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருப்போரூர்.**

**<u>அரசுத்தரப்பு சாட்சிகள்</u>;**

| | |
|---|---|
| அ.சா.1 | திரு. கோபாலகிருஷ்ணன் (புகார்தாரர்/காயமுற்றசாட்சி) |
| அ.சா.2 | திரு. ஏழுமலை (காயமுற்ற சாட்சி) |
| அ.சா.3 | திரு.நிந்தியானந்தம் (காயமுற்ற சாட்சி) |
| அ.சா.4 | திரு.ரமேஷ் (காவல் உதவி ஆய்வாளர்) |

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்;–</u>**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 03.05.2023 | புகார் வாக்குமூலம் |

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.2 | 03.05.2023 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.3 | 03.05.2023 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.4 | 03.05.2023 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.5 | 02.05.2023 | அ.சா.1 ற்கு வழங்கப்பட்ட கருத்துரையுடன் கூடிய விபத்து பதிவேடு |
| அ.சா.ஆ.6 | 02.05.2023 | அ.சா.2 ற்கு வழங்கப்பட்ட கருத்துரையுடன் கூடிய விபத்து பதிவேடு |
| அ.சா.ஆ.7 | 02.05.2023 | அ.சா.3 ற்கு வழங்கப்பட்ட கருத்துரையுடன் கூடிய விபத்து பதிவேடு |
| அ.சா.ஆ.8 | 27.05.2023 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை |

**அரசு தரப்பு சான்று பொருள்,–** இல்லை

**எதிரிகள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருட்கள்;**

இல்லை.

**குறிப்பு;–**

| | |
|---|---|
| 1. | இவ்வழக்கின் 1 மற்றும் 2 எதிரிகள் கடந்த 03.05.2023 அன்று கைது செய்யப்பட்டு, பின்பு 05.05.2023 அன்று இந்நீதிமன்ற, கு.ப.ம.எண்.278/2023, உத்தரவு நாள் 05.05.2023 படி பிணையில் சென்றுள்ளனர். 3 முதல் 6 எதிரிகள் மாண்பமை முதன்மை மாவட்ட நீதிமன்றம், கு.ப.ம.எண்.2635/2023, உத்தரவு நாள் 17.05.2023 அன்று முன்பிணை பெற்று 19.05.2023 அன்று பிணையில் சென்றுள்ளார். |
| 2. | இவ்வழக்கின் சாட்சிகள் மூன்று தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை. |

| | |
|---|---|
| 3. | தீர்ப்பு சம்பந்தப்பட்ட காவல் நிலையத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. |
| 4. | இத்தீர்ப்பின் நகல் மாண்புமிகு தலைமை நீதித்துறை நடுவர், செங்கல்பட்டு அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. |

NILAVARASAN KASI

Digitally signed by NILAVARASAN KASI

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருப்போரூர்.**